தொகுதி 7] [பகுதி 11

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சித்ரபானு ௵ மாசி ௴

FEBRUARY 1943

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | "நல்ல ஆசிரியர்" —S. ஸ்ரீநிவாசன் | 245 |
| 2. | முதியோர்கல்வி இயக்கம், செங்கம் —சி. தங்கமணி | 246 |
| 3. | கல்வியும் இளஞ்சாரணீயமும்—VII —K. K. லக்ஷ்மி நாராயணன் | 251 |
| 4. | ஆரம்பப் பாடசாலை சரித்திரம் பாடதிட்டம் —S. கிருஷ்ணமூர்த்தி | 254 |
| 5. | செய்தித் திரட்டு | 256 |
| 6. | பத்திராதிபர் குறிப்பு | 263 |


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1943 பிப்ரவரி மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

செங்கல்பட்டு — Ch. 6.
வடஆற்காடு — NA 16, 55.
தென்னாற்காடு — SA. 17.
தஞ்சாவூர் — Tan. 42, 46, 58, 65, 89.
திருச்சி — Tri. 26.
ராமனாதபுரம் — Rd. 11.
மதுரை — Md. 10, 22.
திருநெல்வேலி — Tin. 3-A, 10, 11.
சேலம் — S. 4, 54.
கோயமுத்தூர் — Co. 10, 11, 58.
திருவாங்கூர் — Tra. 4.

குறிப்பு.—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்

# பாலர் கல்வி

| தொகுதி 7 | 1943 ஆம் பிப்ரவரி மீ<br>சித்ரபானு ஆம் மாசி மீ | பகுதி 11 |
|---|---|---|

## "நல்ல ஆசிரியர்"

('*Canadian Teacher*' லிருந்து மொழி பெயர்த்தது.)

**S. Srinivasan,** *B. H. S., Chengam.*

"ஒரு நல்ல ஆசிரியர் தன் தொழிலில் பயனளிக்கக் கூடிய புலமையுள்ளவரா யிருத்தல் வேண்டும். பிறருக்குக் கற்பிக்கத் தகுந்த பல விஷயங்களை அவர் அறிந்திருக்கவேண்டும். தான் கற்பிக்கும் பாடங்களைப்பற்றிய அறிவுமட்டும் அவருக்குப் போதாது. தன் தொழில் சம்பந்தமான மற்றத்துறைகளிலும் அவருக்குப் போதிய அளவு ஞானம் இருக்கவேண்டும். இந்தப்பரந்த ஞான ஊற்றிலிருந்து அவர்தன் வகுப்பிலுள்ளவர்களுக்கு அறிவு ஊட்டவேண்டும். வெறும் பாடபுத்தகக்குட்டையில் தேங்கிய அறிவு நீரையே அவர் நம்பியிருப்பது தொழில் முடைமையாகும்.

நல்ல ஆசிரியர் தன் தொழில் முறையின் நுட்பங்களில் தேர்ந்தவர். அவர் உண்மையில் கல்வித்துறையில் ஒரு அனுபவஞானி. ஆக்கத்திறமை நல்லாசிரியருக்கு ஒரு சிறந்த அணிகலம். அவர் தன் தினசரி வேலையில், வாழ்க்கை இன்பத்தைக்காண வேண்டும். தன் மாணவர்களையும் அவ்விதமே காணச் செய்ய வேண்டும். இதை சாதிக்க அவர் சில குறிப்பான ஒழுக்க நுட்பங்களைப் பழக்கம் செய்து கொள்ள வேண்டும். முகமலர்ச்சி முதல் அவசியம். பிறர் உணர்ச்சியை மதித்து நடப்பது, மரியாதை, பொறுமை, உறுதி, சமயோசிதம் இவைகள் அவர் மேற்கொள்ளவேண்டிய புற ஒழுக்கஙகள். அவர் சொல் சுபாவமாகவும், திருத்தமாகவும், விவேகம் பொருந்தியும், தெளிவாயும் இருக்கவேண்டும். அவர் குரல் இனிமை, அடக்கம் நளினம் எல்லாம் கூடியதாயிருக்க வேண்டும். அவர் மனப்பான்மையில் கவர்ச்சி, விழிப்பு, நம்பிக்கை, ஊக்கம் ஆகியவைத் ததும்பி நிற்க வேண்டும்.

உறுதியான கொள்கை ஒரு நல்லாசிரியரின் வாழ்க்கையை ஆட்சிகொள்ள வேண்டும். அவர் தழுவியுள்ள தத்துவம் மனநிம்மதியையும், ஆக்க வலிமையையும் தரத்தக்கதாயிருக்க வேண்டும். அதன் முக்கிய அம்சம், மக்களின் இன்பத்தைப் பெருக்குவதா யிருக்க வேண்டும். தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தின் தேவைகளைப் பகுத்தறிந்து, அதற்கு வேண்டியதைச் செய்யும் செயல் துணிவும் அத்தத்துவத்தில் பொலிய வேண்டும்."

# முதியோர் கல்வி இயக்கம், செங்கம்

ஆசிரியன் சி. தங்கமணி

தற்போது இத்தாலூகா ஆரம்பபாடசாலை எஜுகேஷன் கமிட்டி, (**Chengam Taluk Elementary Education Advisory Committee**) தலைவராய் இருக்கக்கூடிய திரு **M. B.** இரங்கசாமி ரெட்டியார் அவர்கள் பிறர் நலனை தன் நலன் எனக் கொள்கையுடையவராகவும், இதற்கு முன் இத்தாலுக்காபோர்டு தலைவராகவும், ஜில்லா போர்டு தலைவராகவும் இருந்து பொதுஜன செல்வாக்கைப்பெற்று இருக்கின்றார். இவர்தான் இம் முதியோர் கல்வி இயக்கத்திற்கும் தலைவர்.

செங்கம் ரேஞ்சு டெப்டி இன்ஸ்பெக்டர் திரு **A.G.** வில்வராய் **B.A.,L.T.,** அவர்கள், பொது ஜனத்தொண்டு சிறந்ததெனக் கொண்ட கொள்கையையும், அக் கொள்கைக்கேற்ற கல்வியும், சோர்வடையா மனப்பான்மையும், இரக்கமும் உடையவராக இருத்தலால் இவரும் இத் தாலுக்காவிலுள்ள பொதுஜனங்களிடையே நன்மதிப்பும் ஆரம்ப ஆசிரியர்களிடையே அன்பும் அடைந்தவராக இருக்கின்றார். இவர்தான் இவ் வியக்கத்திற்கு காரணகர்த்தர்.

திரு **M.B.** இரங்கசாமி ரெட்டியார், அவர்களும் திரு **A.G.** வில்வராய் அவர்களும் முதன் முதலில் இந்த இயக்கத்தை ஆராய்ந்து இதனால் எம்மதத்தினருக்கும், எந்த ஜாதியினருக்கும், எக் கட்சியினருக்கும் அதிக நன்மையே விளையும் என்பதையும், எவ்வித சிறியதீங்கும் விளையாது என்பதையும், அறிந்து இதில் ஈடுபடலாயினர். இவர்கள் கண்ட உண்மையின்படியே பலவித கொள்கை யுடையவர்களும், மதத்தினர்களும், கட்சியினர்களும் இதில் அங்கத்தினரா யிருக்கின்றனர். இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் தான் **M.B.** இரங்கசாமி ரெட்டியார்.

இத் தாலுக்காவிலுள்ள மொத்த கிராமங்களில் முக்கியமான 25 கிராமங்களிலுள்ள பொது ஜனத்தொண்டில் ஆவலும், திறமையும், வாலிபமும், எழுத்தறிவும் உடைய 42 தொண்டர்களை ஒன்றுசேர்த்தனர். இவர்களில் பாதி கிராமவாசிகள் ஆரம்ப ஆசிரியர்கள். இவர்களுக்கு **S.I. A.E. (Association)** சங்க பொது காரியதரிசி திரு **T.J.R.** கோபால் அவர்களை வரவழைத்து அவர் மூலமாக 1942 ம் வருஷம் மேமீ 26ந் தேதியிலிருந்து, 31 தேதி வரையில் செங்கத்தில் பயிற்சி கொடுத்தார்கள். இப் பயிற்சியில் லாபக்சார்ட்முறையைப் பற்றியும், முதியோர் மனோதத்துவ சாஸ்திரத்தைப் பற்றியும், கிராமங்களில் இச்

சங்கத்தை எப்படி அமைக்கவேண்டும் என்பதைப் பற்றியும் போதிக்கப் பட்டது இப் பயிற்சியில் முக்கியமானது (Each one teach one) படித்த ஒருவர் படிக்காத ஒருவருக்கு கற்றுக்கொடுத்தல் என்ற முறையையே கையாள போதித்தது.

திரு M.B. இரங்கசாமி ரெட்டியார் மற்ற அங்கத்தினருடன் ஆலோசித்து பயிற்சியடைந்த தொண்டர்கள் செல்லும் 25 கிராமங்களை யும் 5 பிரதேசங்களாகப் பிரித்து ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒரு தலைவர் ஒரு காரியதரிசியை தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு பிரதேசத்தை யும் சேர்ந்த கிராமங்களை அப்பிரதேச தலைவரும் காரியதரிசியும் பார்த் துக் கொள்ளும்படி ஒப்புவித்தனர். இவ்வாறாக ஒவ்வொரு கிராமத்தி லும் 15—6—42 ல் ஆரம்பமானது.

கிராமத்தின் சங்கநிலை:—முதியோர் கல்விபயிற்சி பெற்ற தொண் டர்கள் அவரவர்கள் கிராமத்தில் படித்தவர்கள் ஆண் பெண் தனித்தனி யாகவும், படியாதவர்கள் ஆண் பெண் தனித்தனியாகவும் காட்டும் ஒரு ஜாபிதா ஒன்றை தயார்செய்து அந்த ஜாபிதா உண்மையானது என்ப தைக் குறிப்பதற்காக அந்தந்த கிராம அதிகாரிகளின் கைஒப்பம் பெற்று வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் படித்த வர்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஓர் சங்கம் அமைக்கப்பட்டிருக் கிறது. அச் சங்கத்திற்கு கிராம முதியோர் எழுத்தறிவின்மைப் போக் கும் சங்கம் என்று பெயர். இச்சங்கத்தில் 10 முதல் 30 அங்கத்தினர்கள் வரையில் இருக்கின்றார்கள். இந்த அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தங்களால் கூடுமான வரையில் எழுத்தறிவு இல்லாத ஒருவர் முதல் ஐந்துபேர் வரையில் சொல்லி கொடுப்பதாக வாக்குறுதி செய்து, அதன் படியே அவரவர்களின் உறவினரையோ, வேலைக்காரரையோ அல்லது சிநேகிதரையோ தேர்ந்தெடுத்து சொல்லிக்கொடுக்கின்றார்கள். இக் கிராம சங்கங்களின் படித்த பெண்களும் தொண்டர்களாகி அவர்களும் எழுத்தறிவில்லாத பெண்கள் வகையில் தொண்டாற்றுகின்றார்கள். இக் கிராமத்தில் அங்கத்தினராகும் தொண்டர்களுக்குப் பயிற்சி பெற்ற தொண்டர்கள் லாபக்சார்ட்டு முறையையும் மற்றைய தாம் பெற்ற பயிற்சியையும் சொல்லிக் கொடுத்துவிடுவார்கள். கிராமங்களில் நடை பெறும் இவ்வளவு விஷயங்களும் சுருக்கமாக புள்ளி விபரங்களுடன் அப்போதைக்கப்போது தாலுக்கா சங்கத்திற்கு அனுப்பப்படுகிறது. தாலுக்கா சங்க பொது காரியதரிசி இவைகளை யெல்லாம் ஒன்று சேர்த்து மொத்த சராசரி இவ் வியக்கத்தால் இதுவரை படிக்கக் கற்ற வர்கள் எத்தனைபேர் என்பதை தற்போது மொத்தமாக கணக்கு எடுக்க ஏற்பாடு செய்கிறார். அதன் புள்ளி விபரம் ஜனவரி 31 க்குள் தான் முடிவடையும் நிலைமையில் இருக்கிறது.

தாலுக்காச் சங்கம் கிராம சங்கங்களுக்கு செய்த உதவி:— தாலுக்கா சங்கத்தார் இரண்டுமாதம் வரை **T.J.R.** கோபால் அவர்களை வரவழைத்து செங்கத்தில் அவருக்கு வேண்டிய வசதிகளை செய்து கிராம சங்கங்களை யெல்லாம் சரிவர நடைபெற பார்த்துக்கொள்ள ஏற்பாடு செய்து தாங்களும் அவர் வேலையை கண்காணித்து சரிவர நடக்கபார்த்துக்கொண்டனர். இதன் பயனாக் தாலுக்கா சங்கத்தலைவர் முதல் மெம்பர்கள் வரை எல்லோரும் சேர்ந்தும் தனியாகவும் **T.J.R.** கோபாலுடன் சங்கங்கள் உள்ள எல்லா கிராமங்களுக்கும் சென்று பிரசாரம் செய்து எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு எழுத்தறிவின் அவசியத்தைப் பற்றியும் அவ்வறிவைப் பெற்ற தாங்கள் செய்திருக்கும் வசதியையும் சொல்லி பொதுஜன ஆவலை உண்டாக்கியதோடு, சங்க மெம்பர்களையும் சந்தித்து அவர்கள் செய்யும் தொண்டின் சிறப்பை விளக்கி அவர்களுக்கும் உற்சாகத்தை வளர்த்து வந்தார்கள் இதில் முக்கியமாக பலன் அளித்தது எது என்றால் பொதுஜன செல்வாக்குடன் அவர்களை தன் சொல்படி நடக்கச் செய்யும் வன்மையுடைய திரு **M.B.** இரங்கசாமி ரெட்டியார் அவர்களின் உழைப்பு கிராமத்தாரை இச் சங்கத்தில் ஈடுபடச் செய்தது. செங்கம் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் திரு **A.G.** வில்வராய் அவர்களின் தொண்டானது ஆசிரியர்களையும் போதிக்க முன்வந்த எழுத்தறிவுள்ள கிராம தொண்டர்களையும் ஆர்வத்துடன் வேலை செய்ய வசதிசெய்தது. இது எப்படி இருக்கின்றதெனின் எண்ணையுடன் கூடியவத்தித்தான் இருளைப்போக்கும் விளக்காவது போல் எழுத்தறிவில்லாத இருளைப்போக்க இவர்களும் விளக்கே போலாயினர். இதுவல்லாமல் கிராமங்கள் ஒன்றுக்கொன்று போட்டியுடன் வேலை செய்யவும், தொண்டர்களின் கவனத்தையும் கல்வி யறிவில்லாதவர்களின் கவனத்தையும் ஒன்றாக கவரும்படியாய் எந்த கிராமத்தில் தொண்டர்கள் உண்மை உழைப்புடன் வேலை செய்கின்றார்களோ அத் தொண்டர்களுக்கு வேண்டிய பரிசும் எந்த கிராமத்தில் அதிகமாக எழுத்தறிவின்மையைப் போக்குகின்றார்களோ அக்கிராமத்திற்கு ஒரு ரேடியோ செட்டும் கொடுப்பதாக் சொன்னார்கள். சொல்லியபடி செய வார்கள் என்னும் எண்ணம் எல்லோருக்கும் உண்டு.

தாலுகா சங்கம் செய்த இதர தொண்டு:—இவ்வருஷம் திருவண்ணமலையில் நடந்த கார்த்திகை தீப உற்சவத்தின்போது திருவண்ணமலை முனிசிபல் ஐஸ்கூலில் ஓர் ஒலிபரப்பும் கருவியை அமைத்து தாங்கள் செங்கம் தாலுக்காவில் செய்யும் முதியோர் கல்வியைப்பற்றியும் அதன் பயனைப்பற்றியும் எழுத்தறிவின் அவசியத்தைப்பற்றியும் பிரசார மூல்யமாகவும் சம்பாஷணை மூல்யமாகவும் தாங்களாகவும் பிரபல அறிவாளிகளைக்கொண்டும் 18-11-42 வரை நடத்தினர். இதன் பயனாக வேலூர் முனிசிபால்டியரால் ஒரு சங்கமும் திருவண்ணமலை டாலுக் அட்வைசர்

கமிட்டியரால் ஓர் சங்கமும் நிறுவப்பட்டிருக்கிறது. இச் சங்கங்களை நிறுவ செங்கம் தாலுக்கா சங்கம் தொண்டர்களை அனுப்பியும் தான் நேரில் சென்றும் உதவிபுரிந்திருக்கிறது.

முதியோர் சங்கமுள்ள பரமனந்தல் என்னும் கிராமத்தின் நிலை:— இக்கிராமத்திலுள்ள சங்கத்திற்கு 21 தொண்டர்கள் உண்டு. இதில் ஒருவர் பெண். இதற்கு K. வெங்கடாஜல உடையார் தலைவராகவும் திரு. சின்னப்பன் என்பவர் காரியதரிசியாகவும் இருக்கின்றார். இக்கிராமத்தில் 16 வயதுக்கு மேற்பட்டு 60 வயதுக்குள் மொத்த எழுத்தறிவு பெற்றவர் 93 ஆண் 22 பெண் எழுத்தறிவு பெறாதவர் 270 ஆண் 254 பெண். ஆகமொத்தம் 363 ஆண் 276 பெண். இக்கிராமத்திலுள்ள தொண்டர்கள் ஒவ்வொருவரும் அவரவர்களின் ஒய்வு நேரங்களுக்கு ஏற்றபடி ஒன்றுமுதல் ஐந்துபேர் வரையில் எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு எழுத்தறிவு உண்டாக்க ஏற்பாடு செய்து ஒவ்வொருவரும் அவர்களின் வசதிக்கு ஏற்றபடி அவர்களின் சுற்றுப்புறங்களில் உள்ளவர்களாகவும் உறவினர்களாகவும், வேலைக்காரர்களாகவும் இருக்கக்கூடிய எழுத்தறிவு இல்லாதவர்களை தேர்ந்தெடுத்து சங்கத்திற்கு கணக்கு கொடுத்து இருக்கின்றார்கள். அவ்வாறாக எடுத்தகணக்குப்படி 40 எழுத்தறிவு அற்றவர்களுக்கு போதிக்கப்பட்டு வருகிறது. இத்தொண்டர்கள் கற்றுக்கொள்பவருக்கு உண்டாகும் ஒய்வான காலங்களில் தாங்களும் கூடுமானவரையில் சொல்லிக்கொடுத்து வருகிறார்கள். இத்தொண்டிற்கு குறித்தகாலம் கிடையாது. ஆனால் எழுத்தறிவுபெறும் முதியோர்களை பிறர் ஒருவர் பார்க்கவேண்டுமானால் இச்சங்கத் தொண்டர்களை அழைத்துவரச்சொன்னால் அழைத்துவந்து காட்டுகின்றார்கள். இச்சங்கம் அடிக்கடி இத்தொண்டர்களை ஒன்றுசேர்த்து அவரவர்கள் சொல்லிக்கொடுக்கும் முறையைப்பற்றி கேட்டும் தவறாக இருந்தால் திருத்தியும் தேர்ச்சியைப்பற்றி கேட்டும் கூடுமானவரையில் வேண்டிய உதவியும் செய்து வருகிறது. இச்சங்கமானது தேவையான காலத்தில் இக்கிராமத்திலுள்ள முதியோர் கல்வி இயக்க அனுதாபிகளிடம் இருந்து சிறிது பணம் வசூலித்துக்கொள்ளுகிறது. இச் சங்க அங்கத்தினர்கள் அனைவரும் தாலுக்கா சங்கமானது பரிசு கொடுத்தால் பரிசை இக் கிராமம் தான் அடையவேண்டும் என்ற எண்ணத்துடன் சோர்வடையாமல் உழைக்கின்றனர். இச் சங்க தொண்டர்களையும் எழுத்தறிவு பெறும் முதியோர்களையும் இந்த ஜில்லா கல்வி அதிகாரி திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் பார்வையிட்டு பாராட்டியிருக்கின்றார்.

நான் கண்ட பயன்:—நான் பரமனந்தல் கிராமத்தில் ஆரம்ப ஆசிரியராய் இருப்பதினால் ஆரம்ப கல்வியை விட்டு முதியோர் கல்வியில் ஈடுபட்டு அநேகருக்கு சொல்லிக்கொடுக்க முடியவில்லை. இக் கிராமத்திலுள்ள தொண்டர்களின் அன்றாட வேலையை வரையறுத்து

கொடுத்து அவரவர்களின் வேலையை உற்சாகத்துடன் செய்யும்படி செய்வதுதான் இச் சங்கத்தில் நான் எடுத்துக்கொண்ட தொண்டு.

இக் கிராமத்திலுள்ள முதியோர்கள் இச் சங்க மூலயத்தால் தாங்கள் படிப்பதுடன் கல்வியின் அவசியத்தையும் பயனையும்பற்றி அவரவர்கள் தெரிந்துகொள்வதால் தங்கள் தங்கள் பிள்ளைகளை முன்பைக் காட்டிலும் பாடசாலைக்கு சரிவர பெற்றோர்கள் அனுப்புகின்றார்கள். இச் சங்கம் பெற்றோர் சங்கத்தைக்காட்டிலும் பாடசாலை விஷயத்தில் நன்மையளிக்கின்றது. கிராமத்திலுள்ளவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒருவித அன்பு ஏற்படுகிறது. ஆசிரியர்களுக்கு வேண்டிய சிறிய உதவிகளையும் பெருந்தன்மையான மனதுடன் செய்கின்றார்கள். நம் நாட்டிலுள்ள மக்களில் பெரும்பாலர் நாள்முழுவதும் ஊண் உடைக்காகவே தங்களின் நாள் பூராவையும் கழிப்பதால் இவர்களை எல்லாம் ஒன்றாக ஒரு குறித்தகாலத்தில் சேர்த்து பாடசாலையாக அமைத்து நடத்த முடியவில்லை. அப்படி நடத்திப் பார்த்ததில் நாளுக்குநாள் குறைந்து பயனற்று போய்விட்டிருக்கிறது. சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர்களும் குறித்தகாலத்தில் தங்கள் வேலையைவிட்டு சொல்லிக்கொடுக்க முடியவில்லை. **(Each one teach one)** படித்த ஒருவர் படியாத ஒருவருக்கு சொல்லிக்கொடுத்தல் என்ற முறையை கையாளுவதால் கற்போர்க்கும் கற்றுக்கொடுக்கிறவர்களுக்கும் சுலபமாக இருப்பதோடு பலர் இவ் வேலையில் பங்கெடுத்து உழைக்க வசதி யிருக்கிறது. பலனும் அதிகம் உண்டாகிறது.

கல்வியறிவில்லாத பொது ஜனங்களுக்கும் கற்றுக்கொடுக்கும் தொண்டர்களுக்கும் கல்வியின் அசிவயத்தைப்பற்றியும் கற்றுக்கொடுப்பதினால் கற்றுக்கொடுக்கும்தொண்டர் செய்யும் தொண்டின் நற்பயனைப் பற்றியும் விபரமாக சொல்லும் ஆற்றலுடைய பிரசாரம் செய்பவர்களைக் கொண்டு எவ்வளவுக்கெவ்வளவு பிரசாரம் செய்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு பயன் உண்டாகிறது.

# கல்வியும் இளஞ்சாரணீயமும் - VII

**K. K. Lakshminarayanan,** (*Abiramapuram*)

(233-ம் பக்கம் தொடர்ச்சி)

1. எம்மதமும் சம்மதமும் :—ஜாதிச் சண்டை, சமயச் சண்டை முதலியனவும், நசுக்கி வளரவிடாமல் செய்யும் இடம் சாரணீயம்தான் அதிலும் இளஞ்சிறார்களாகிய குருளையர்களிடம் களங்கமற்ற மனதில் முதலில் ஜாதிமதம் என்ற அபிப்பிராயபேதம்கிடையாது. ஆகையால் நாம் எல்லாம் ஒருவர், எல்லாம் சகோதரர்கள், இந்திய மக்கள் என்று பழக்கிக்கொண்டுவந்தால், பின்னால் தானாக அவர்கள் பெரியவர்களான போதும் இவ்வித்யாஸங்கள் தோன்றாது. இந்த ஒரு இடத்தில் சாரணீயத்தைக் காட்டிலும், குருளையர் இயக்கம்தான் மிகவும்நல்லது. ஏனென்றால் குருளையர் இயக்கத்தில் ஏழு வயதிலேயே அவர்களைத் திருத்திக் கொண்டுவர முடியும். "ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா" என்பதாலும், "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்" போலும், சிறு வயதில் பழக்காமல் விட்டால் பின்னால் திருத்த வெகு கஷ்டம். ஆகையால் குருளையர்களை முதல் முதலில் பழகும்போதே உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்று தெரியுமுன்னரே நாம் எல்லா ஜாதிச் சிறுவர்களையும் ஒரேமாதிரி நடத்திவந்தால் அவர்களுக்குள் பேதம் இல்லாமல் சகஜமாக எல்லாச் சிறுவர்களும் வித்யாஸம் பாராட்டாமல் பழகுவார்கள்.

2. பக்ஷபாதமின்மை:—சாரணீயத்தின் அடிப்படையான இந்த குணம் சிங்கக்குட்டி ஆசிரியரிடம் முதல்முதலில் வேரூன்றி இருக்க வேண்டும். குருளையர் வகுப்புகள் நடக்கும்போதோ, அல்லது வேறு எப்போதாவது உயர்ந்த ஜாதிப் பையன், தாழ்ந்த ஜாதிப் பையன், பணக்காரப் பையன், ஏழைப் பையன் என்ற வித்யாஸங்களை நம் மனதில் வைத்துக்கொண்டு அதற்குத் தக்கவாறு அவர்களை வெவ்வேறுவிதமாக அவர்களிடம் பக்ஷமாக இருப்பதோ அல்லது அவர்களைத் தக்கவாறு நடத்துவதோ மிகவும் தப்பிதமான காரியம். இவைகளை நாம் கையாளக்கூடாது. நமக்கு நம்மிடத்தில் பொறுப்பாக விடப்பட்டிருக்கும் எல்லாக் குழந்தைகளும் ஒன்றுதான் என்ற அந்த பரந்த நோக்கம் இருக்கவேண்டும். இளம்பிராயத்திலிருந்தே சிறார்கள் ஒருவரோடு ஒருவர் ஒருவித சங்கோஜமுமில்லாமல் ஒருவித வித்யாசமும் இல்லாமல் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்றதும் இல்லாமல் பழக்கிவிட்டால், பின் சேர்ந்து விளையாடுவது, "கூட்டாஞ்சோறு உண்ணல்" முதலியன செய்துவிட்டால், பின் இப்படி பழக்கப்பட்ட நம் இளஞ்சிறார்களே பெரி

யவர்களாக ஆனபோது, யாராவது ஜாதி மதம் என்று மேடைகளில் பிரசங்கம் செய்தார்களானால், இவர்கள் "ஜாதி ஏதையா மத பேதம் தானையா" என்ற பாட்டைப் பாடி நமக்குள் ஜாதிவித்யாஸங்கள் கிடையாது என்று வாதாடுவார்கள்.

3. ஒற்றுமை :—ஒற்றுமையை சாரணீயத்தில் மிகமிகக் காணலாம். ஒற்றுமையில்லாமல் போனால் சாரணீய சங்கிலி அறுந்துவிடும். சாரணீயத்தில் ஒவ்வொருவரும் ஒற்றுமையான வளையத்தால் பிணைக்கப்பட்டு இருக்கிறோம். பிள்ளைகளையும் அடிக்கடி ஒற்றுமையாக இருக்க வற்புறுத்துகிறோம். ஆனால் கொஞ்ச காலமாக சாரணீய இயக்கங்களில் பிளவு இருப்பது ஒற்றுமைக்கு ஒருவிதமாக இடையூறாக இருக்கிறது. நான் சாரணீயத்தில் குறை கூறவில்லை. ஆனால் அதில் சில சீர்திருத்தங்கள் செய்யக் கேட்டுக்கொள்கிறேன். சாரணீயத்தில் காணப்படும் பிளவுகள் (வெவ்வேறு பெயர்கொண்ட சாரணீய இயக்கம்) எப்படியாவது போய் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே ஒரு சாரணீய இயக்கம் வைத்து இந்திய நாட்டில் சாரணீயத்தில் பிளவுகள் கிடையாது. அங்கு இருப்பது ஒரு சாரணீய இயக்கம்தான். அதன் பெயர் அந்த நாட்டின் பெயர்கொண்ட "இந்திய சாரணீய சங்கம்" (**Indian Scout**) என்று உண்டானால், அதுவே நாம் இந்தியாவில் பிளவுபட்டு இராமல் ஒற்றுமையாக இருப்பதற்கு அடையாளம் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம்.

4. பல இயக்கங்கள் இருப்பதால் உள்ள கஷ்டம் :—சாதாரணமாக ஒரு ஆசிரியர் தன் பள்ளியில் சாரண இயக்கம் ஆரம்பிக்கும்போது எந்த பெயர்கொண்ட சாரண இயக்கத்தில் சேருவது என்ற ஒருகலக்கம். ஆசிரியர் நாம் ஹிந்துஸ்தான் சாரண இயக்கத்தில் சேரலாம் என்று சொன்னால் அதற்கு மானேஜர் அது கூடாது. அது எந்தக் கட்சியைச் சேர்ந்தது என்று சொல்லுங்கள் முதலில் என்கிறார். அதற்கு சாரணீயத்தில் ஜாதிச் சண்டை, சமயச் சண்டை, கட்சிச் சண்டை எதுவும் கிடையாது என்று எவ்வளவுதூரம் சொன்னாலும் அவருக்குப் புரிவதில்லை. அதற்குள் இரண்டுவித சாரணீய சம்பந்தமான உத்யோகஸ்தர்களும் (உதாரணமாக **Boy's Scout, or Hindustan Scout**) வந்து இந்த சாரணீயத்தில் சேருங்கள் என்று போட்டி போடுகிறார்கள். ஆகையால் சாரணீயத்திற்குள்ள பெருமையே கொஞ்சம் குறைகிறது. பின் மானேஜருக்கு சந்தேகம் அதிகமாகிவிடுகிறது. சீக்கிரமாக சாரணீயத்தில் சேர உபாத்தியாயர் அனுமதி கேட்டால், இருங்கள் பள்ளியை தணிக்கை செய்யும் டிப்டி இன்ஸ்பெக்டருக்கும், ஜில்லா கல்வி அதிகாரிக்கும் எந்த சாரணீய இயக்கம் பிடிக்கும் என்று தெரிந்துகொண்டுவந்து பிறகு சொல்கிறேன் என்கிறார். அவருக்குக் கிராண்டு எங்கு குறைத்துவிடப் போகிறார்களோ என்ற பயம். இரண்டு சாரணீய சங்கத்திலுள்ள

சட்ட திட்டங்கள் ஒன்றாக ஏறக் குறைய இருந்தபோதிலும், நடுவில் உள்ள உத்யோகஸ்தர்களாலும், இரண்டு பெயர்களால் இருப்பதாலும், சில பேர்கள் வீணாக இது இந்தக் கட்சியைச் சேர்ந்தது, அது அந்தக் கட்சியைச் சேர்ந்தது என்று வீணாகக் கயிறுகட்டி விடுவதாலும், சாதாரணமாக கிராம ஆசிரியர் எந்த இயக்கம் வைப்பது என்று ஒரு முடிவுக்கு வருவதற்கே திண்டாட்டமாகிறது.

5. வேண்டுகோள் :—ஆகையால் எல்லா ஊர்களிலும், எல்லா சங்கங்களிலும், எல்லா சாரண இயக்கங்களிலும் உள்ள உத்யோகஸ்தர்களையும், நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் எப்படியாவது எல்லா சாரண இயக்கங்களையும் பல பெயர்களை ஒழித்தும், ஒன்றாகச் சேர்த்து, ஒற்றுமையாகவும், சந்தோஷத்துடனும், ஒரே ஒரு "சாரணீய இயக்கத்தை" ஏற்படுத்தி அதற்கு "இந்திய சாரணீய சங்கம்" (Indian Soout) என்று பெயர் வைத்துவிடுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஒற்றுமைக்கு அடிப்படையான இந்த காரியத்துக்கு எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவான்.

[தொடரும்]


மாணவர்களே! வாலிபர்களே !!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

## சுவாமி விவேகாநந்தர்

## ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த | சரித்திரம் | விலை | 0—12—0 |
| ,, ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

# ஆரம்பப் பாடசாலை சரித்திரப் பாடதிட்டம்

S. Krishnamurthi, *Assistant, Govt. Training School, Villupuram*

## (அமைப்பு விளக்கம்)

(1) ஆரம்பப் பாடசாலை சரித்திரப் பாடத்திட்டம் வகுப்பிற் கேற்ற சவிஸ்தாரமுறையை அனுசரித்து ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. இப்பாடத்திட்டம் நமது தேசத்தின் சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

(2) ஆரம்பப் பள்ளிகளில் முக்கியமானவர்களைப் பற்றியும் முக்கியமான சம்பவங்களைப் பற்றியும், கதைகள் மூலமாக தொடர்ச்சியாக காலவரிசைப்படிக் கற்றிருக்க வேண்டும். இந்த மாதிரியாகவே கோர்வையாக பாடத்திட்ட விஷயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 4-ம்வகுப்பில் மூன்றும் வகுப்பைவிட சரித்திர விஷயங்கள் அதிகமாக இருக்கின்றன. 5-ம் வகுப்பில் 4-ம் வகுப்பைவிட விஷயங்கள் இன்னும் அதிகமாக இருக்கின்றன.

(3) முதன் முதலில் சரித்திரம் போதிப்பதில் கற்பனைசக்தியை **(Imagination)** விருத்தி செய்து அதன் பிறகு ஞாபக சக்தியையும் **(Memory)**, தீர்மானிக்கும் சக்தியையும் **(Judgment)**, உள்ளுணர்ச்சியையும் **(Interest)**, நூதன விஷயங்களைக்கண்டு அறியும் தன்மையையும் **(Curiosity to find new things)**, காரணகாரியங்களை ஊகிக்கும் சக்தியையும் **(Cause and effect)**, படிப்படியாக விருத்தி செய்ய வேண்டும் இதற்குத் தக்கபடி கற்பனைசக்தியை விருத்தி செய்ய பலவிதக் கதைகள், **(True tales, Legendary tales and mythical tales)** சரித்திரப் பாடத்திட்டத்தில் இருக்கின்றன. உதவிகளாக வாய்ச் சொற்களையும் செயல் நிரம்பிய படங்களையும் உபயோகப்படுத்தல் வேண்டும்.

(4) நடித்தல் மூலம் சிறுவர்கள் பல சரித்திர விஷயங்களை நன்றாக ஞாபகத்தில் இறுத்திக்கொள்ள முடியும். உண்மையான மனோபாவனைகளுக்குக் கைவேலைகள் மிகவும் பயன் படுகின்றன.

இவைகளுக்குச் சந்தர்ப்பங்கள் அநேகம் பாடத்திட்டத்தில் மலிந்துகிடக்கின்றன.

மேற்சொன்னவற்றிலிருந்து, சரித்திரப் பாடத்திட்டமானது அப்பாடத்தைக் கற்பிப்பதன் நோக்கங்களை எவ்வளவு அழகாக பூர்த்தி செய்கின்றது என்பது நன்கு விளங்குகிறது.

(5) 3-ஆம் வகுப்பு மாணவர்கள் தற்கால சரித்திர சம்பவங்களை அறிவது என்பது சிரமமானதால் அவ்விதச் சம்பவங்கள் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் அதற்கு பதிலாக உள்ளூர் சரித்திர சம்பந்தமான விஷயங்கள் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. இதன் முக்கிய நோக்கம் யாதெனில் சிறுவர்களுக்கு சரித்திரம் படிப்பதில் ஒருவித ஆசையையும், ஆவலையும், சரித்திர சம்பந்தமான விஷயங்கள் எல்லாம் அநேகமாக உண்மை என்பதையும் உண்டு பண்ணுவதேதான்.

(6) சரித்திர சம்பந்தமான “அஸ்திவாரம்” பலப்படுவதற்காக உள்ளூர் சரித்திர சம்பந்தமான விஷயங்கள் மீண்டும் நான்காவது வகுப்பில் புகுத்தப்பட்டிருக்கின்றன.

(7) ஆனால் 5-ம் வகுப்பில் சரித்திர விஷயங்கள் முழுவதும் நமது தேசத்தைப்பற்றினவையே. ஸ்தலச் சரித்திர சம்பந்தமான முக்கிய நிகழ்ச்சிகள் இங்கு காணப்படவில்லை. காரணம் யாதெனில், 3, 4-ம் வகுப்புக்களில் தகுந்தபடி சரித்திர சம்பந்தமான அஸ்திவாரம் ஏற்பட்டதுதான்.

(8) ஏன் பாடத்திட்டம் தேசச்சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டது என்றால் தற்போது பிள்ளைகள் 5-ஆம் வகுப்பு முடியப் படித்துப் பள்ளிக்கூடத்தை விடும்போது நம்முடைய தேசச் சரித்திரத்தின் முழு விவரங்களையும ஸ்தூலமாக கதைகள் மூல்யமாய் தொடர்ச்சியாக காலவரிசைப்படி கற்றிருக்க வேண்டும் என்பதேதான்.

(9) மூன்றாவது வகுப்பில் சில உண்மை, வதந்தி, கட்டுக்கதைகளும் (**true, legendary and mythical stories**) நான்காவது வகுப்பில் சில சரித்திரப் பெரியார், ஆசாரியர்களைப்பற்றின வரலாறுகளும், ஐந்தாம் வகுப்பில் நம் தேசத்தில் பல் வேறுகாலங்களிற் தோன்றிச் செழிப்புடன் வளர்ந்து வீழ்ந்த சில சாம்ராஜ்யங்களையும், அவற்றை ஆண்ட பெரிய மகாராஜாக்களைப்பற்றியும் பாடத்திட்டம் சொல்வதாய் அமைந்துள்ளது.

(10) காலத்தொடர்பின் அறிவு விளக்கமாகப்புகட்டப்படும்படி 5-ம் வகுப்பு விஷயங்கள் நன்கு அமைந்திருக்கின்றன.

# செய்தித் திரட்டு

---

### இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்

27—1—43-ல், இப்பாடசாலையின்மீது பற்றுக்கொண்டு தம் சொல்லாலும் செயலாலும் நன்மைகளைச் செய்துவந்த திவான்பகதூர் தெய்வசிகாமணி முதலியார் அவர்களின் பிரிவை முன்னிட்டு ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

---

### கணபதி நேஷனல் ஸ்கூல், சைதாப்பேட்டை

(a) தமிழ்மொழி வளர்ச்சிக் கழகம்.—இச் சங்கத்தின் ஆதரவில் 29—1—43-ல் 'பிரக்லாதா' என்னும் சரித்திரம் ஸ்ரீ சக்ரபாணி அய்யங்கார் அவர்களால் உபந்நியசிக்கப்பட்டது,

(b) சாரண இயக்கம்.—இப்பள்ளியிலுள் சாரணர்கள் சென்னை ஹிந்துஸ்தான் சாரண சங்கத்தாரால் 16—1—43-ல் நடத்தப்பட்ட பந்தய விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு நால்வர் நல்ல பரிசு பெற்றனர்.

(c) 23—1—43-ல் **Scout rally**-யும், 30—1—43-ல் வருஷாந்தர விளையாட்டுப் பந்தயங்களும் நடைபெற்றன.

---

### உயர்தர ஆண் பாடசாலை, கருங்கலக்குடி

#### சாரணர் வாரக் கொண்டாட்டம்

25—1—43-ல் சாரணர் வாரக் கொண்டாட்டத்தின் அவசியத்தைப்பற்றியும் அதன் நோக்கங்களைப்பற்றியும் ஸ்ரீ தத்தா வெங்கட்டராமய்யர் சொற்பொழிவு செய்தார். மாணவர்கள் பள்ளிக்கூடங்களை சுத்தம் செய்து அலங்கரித்தனர்.

26—1—43-ல் அசுத்தமாக வந்தவர்களுக்கு கைநகம் வெட்டி, தலைக்கு எண்ணெ தடவி வாரி முடித்தல், நெற்றிக்குப் பொட்டு இடுதல் முதலிய சேவைகளை தினசரி வழக்கம்போல் செய்தனர். மாலையில் சாரண விளையாட்டுகளும், கவாத்தும் நடைபெற்றன.

27—1—43-ல் தேகம், ஆடை முதலியவைகளின் சுத்தமும், முதலுதவியும் கவனிக்கப்பட்டன. மாலையில் சாரணப் படையும் குருளையர் படையும் பந்தய விளையாட்டுகளில் ஈடுபட்டனர்.

28—1—43-ல் கொடி வணக்கம், கவாத்து. தேகப்பயிற்சி காட்சி, முதலியன நடைபெற்றன். சாரண இயக்கத்தைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணய்யங்கார் சொற்பொழிவு செய்தார்.

## மகளிர் இல்லத்தில் திறப்பு விழா

அமராவதிபுதூர் மகளிர் இல்லத்தில் நடைபெற்றுவரும் மாண்டிசோரி ஸ்கூலுக்குப் புதிதாகக் கட்டப்பெற்றிருக்கும் ஹாஸ்டலின் திறப்பு விழாவும், பெண் பாடசாலை—மாண்டிசோரி ஸ்கூல் இவற்றின் ஆண்டு விழாவும் 1—2—43 திங்கட்கிழமை மாலை 5 முதல் 7-30 மணி வரை சிறப்பாக நடைபெற்றன. செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்தது மன்றி, ஆண்டு விழாவுக்கும் தலைமை வகித்துச் சிறப்பித்தார். தலைவர் தமது முகவுரையில் மகளிர் இல்ல அதிபரும் 'குமரன்' ஆசிரியருமான திரு. சொ. முருகப்பா அவர்களும், மரகதவல்லி முருகப்பா அவர்களும் நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர் கல்விக்காக மகளிர் இல்லம் அமைத்து உழைத்து வருவதைப் பாராட்டி இந்தச் சிறந்த தொண்டுக்கு எல்லோரும் உதவுவது அவசியமென்று குறிப்பிட்டார்.

தலைவர் முகவுரைக்குப் பின் மாண்டிசோரி ஸ்கூல்பிள்ளைகளுடையவும், பெண் பாடசாலை மாணவிகளுடையவும் பாட்டு, நடனம், கும்மி, கோலாட்டம் முதலியன நடைபெற்றன. சிலப்பதிகாரத்திலுள்ள வரிப் பாடல்களில் இரண்டை மாணவிகள் பாடி, அபிநயம் பிடித்து ஆடியது பாராட்டத்தக்கதா யிருந்தது. அப்பால் மாணவிகள் ஒரு சங்கீதக் கச்சேரி நடத்தினர். 'புலவரும் பிரபுவும்' என்ற காட்சியில் வீரபாண்டியன் எனும் 4½ வயது மாண்டி சோரி ஸ்கூல் மாணவன் புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம், நள வெண்பா முதலிய நூல்களிலிருந்து பல பாடங்களைச் சொல்லி பொருளுரைத்தது அவனது திறமையைக் காட்டியதுமின்றி, மாண்டிசோரி முறைப்படி இளம் சிறுவருக்கும் நல்ல கல்வி அறிவைச் சொற்ப காலத்திற்குள் புகட்டி விடலாமென்பதையும் நிரூபித்துக் காட்டியது.

திரு. சொ. முருகப்பா அவர்கள் நன்றி கூறும்போது சென்ற வருஷம் சுமார் பதினாயிரம் ரூபாய் வரை நன்கொடைகள் அளிக்கப் பட்டதாயும், புது வருஷத்திற்கு மூலதனமாக முதன்முதல் கனம் ராஜா ஸர் அவர்கள் 3500 ரூபா கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

தலைவர் அவர்கள் தமது முடிவுரையில் "இங்கு நடந்த சங்கீத நிகழ்ச்சிகள் அனைத்தும் ஆனந்தம் அளித்தன. இங்கு தோன்றிய புலவர்களும் சங்கீத வித்வான்களும் நம் நாட்டில் இருப்பதுவரைத் தமிழும் தமிழிசையும் வளரும் என நிச்சயமாக நம்பலாம்" என்று கூறிமுடித்தார். விழாவைப் பாராட்டி குமார ராஜா ஸர் முத்தையா செட்டியார், ராவ்பகதூர் ஸி. வி. ஸி. டி. வெங்கடாசலம் செட்டியார், மகாமகோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், ஈ. வெ. ராமசாமி, வி. வி. ராமசாமி முதலிய பல பிரபலஸ்தர்களும் பாராட்டுச் செய்திகள் அனுப்பியிருந்தனர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை மகளிர் இல்லம்

ஆற்றிவரும் சீரிய தொண்டைப் பாராட்டி அடியிற்கண்ட வாழ்த்துப் பாவை அனுப்பியிருந்தார்.

செந்தமிழ் வாழ்க வாழ்க செட்டிநாட் டரசர் வாழ்க
சந்ததம் மகளிர் இல்லம் தரணியில் ஓங்கி வாழ்க.

---

### போர்டு ஆண் பாடசாலை, வெள்ளார்—பெற்றோர் சங்கம்

23—1—43-ல் இச்சங்கம் ஸ்ரீ குப்புக் கவுண்டர் தலைமையில் கூடிற்று. பல பெற்றோர்களும் மாணவர்களும் கூடி இருந்தனர். பாடசாலை மாணவர்கள் 'விறகு வெட்டி,' 'நீதி வழங்கிய நிருபன்' என்னும் இரண்டு நாடகங்களை நடித்துக் காட்டினர். முதியோர் கல்வி, பெற்றோர் அறிவிப்பு விஷயங்கள் பற்றி ஆசிரியர் ஸ்ரீ மாணிக்கம் பேசினார். கிராம வாழ்க்கையும் சிக்கனமும் என்பதுபற்றி ஆசிரியர் சந்தாமியான் சாகிப் பேசினார். பாடசாலை முன்னேற்றம், வேண்டிய மார்க்கங்கள் பற்றி பெற்றோர் சார்பில் வரதப்ப செட்டியார் பேசினார்.

---

### டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சாவூர்

(a) 9—1—43-ல் இச்சங்கம் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. V. வெங்கட்டராம அய்யர் அவர்கள் தலைமையில் கூடிற்று. நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தலைவர் அவர்கள் இயற்கைப் பாடம் போதித்தல் என்பது பற்றி விரிவாகப் பேசினார். பிறகு பெண்களுக்குத் தனிப் பாடசாலையுள்ள இடங்களில் மாணவர்களின் சகோதரிகளை மட்டும் ஆண் பாடசாலைகளில் சேர்க்கலாம் என்றும், மற்ற எக்காரணத்தைக் கொண்டும் சேர்ப்பதானால் இன்ஸ்பெக்டர் உத்திரவுபெற்றுத் தான் சேர்க்கவேண்டுமென்றும் உரைத்தார். பெண்கள் பாடசாலையில் ஆண்களைச் சேர்ப்பதுபற்றி சட்டம் உண்டோ என்ற கேள்விக்குத் தலைவர் பெண் பாடசாலையில் ஆண்கள் சேர்ந்தால் அது விரைவில் அதிகாரிகளின் மூலம் ஆண் பாடசாலையாக மாறிவிடும் என்று பதிலளித்தார்.

---

### (b) ஓர் ஆரம்ப ஆசிரியரின் சுற்றுப்பிரயாணம்

நான் சென்ற 1924-ம் ஆண்டுமுதல் நாளதுவரை ஒவ்வொரு வருஷமும், கோடை, கிருஸ்துமஸ், விடுமுறை நாட்களில் குறைந்த என் சொந்தச்செலவில் ஆசிரியர் பணியுடன் தனியாக சைகிள் பிரயாணமாகவே சராசரி மணிக்குப் பத்துமைல் வீதம் ஒரு நாளைக்கு 100 மைல்களுக்குக் குறையாது சுற்றுப்பிரயாணம் சென்றுவருவது வழக்கம் அவ்வாறு திருப்பதி முதல் கன்யா குமாரிவரை பல இடங்களுக்கு யாத்திரை சென்று, இயற்கையின் மேன்மை, சரித்திரத்தின் உண்மை, தொழிற்சாலை அமைப்பு முதலிய பல விஷயங்களை நேரில் கண்டு ஆனந்திக்க நேர்ந்தது. குறைந்த ஊதியத்தைப் பெற்றுவாழும் ஆசிரியர்

சுற்றுப் பிரயாணம் செய்ய சைகிள் பிரயாணமே மேலானது. உடல் நலம் குன்றுமனும், சிக்கனச்செலவில் சுலபமாய் சென்று வரும் மார்க்கங்களை முதலில் அறிந்துகொள்ள வேண்டியதும் அவசியமாகும். சைகிள் சுற்றுப் பிரயாணத்தால் ஆசிரியர்கள் பல நன்மைகளை அடையலாம். ஆகையால் சகோதர ஆசிரியர்கள் தங்கள் சொல்ப செலவில் சைகிள் சுற்றுப் பிரயாணம் செய்யமுற்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் இனி செல்லவிருக்கும் சுற்றுப்பிரயாண திட்டத்தில் விரும்புவோர் கலந்துகொள்ளலாம்.--**T. S. Maruthi Rao, Secretary, Town Teachers' Association, Tanjore and a cycle Tourist.**

---

## உதவிபெறும் ஆரம்பபாடசாலை, ஸ்ரீவாஞ்சியம

31—10—42ல் பெற்றோர் சங்கம் நடைபெற்றது. ஸ்ரீ ராஜகோபாலய்யர் தலைமை வகித்தார். உண்மை என்பதைப்பற்றியும், குடியினால் ஏற்படும் கெடுதல்களைப் பற்றியும் சொற்பொழிவுகள் நடந்தன.

இப்பாடசாலை செஞ்சிலுவைச் சங்கத்தினரை ஆறுபிரிவுகளாகச் செய்து அவை ஒவ்வொன்றுக்கும் பெரிய பிரமுகர்களின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் உற்சாகத்துடன் வேலைசெய்துவருகிறார்கள். இவ்வூர்பக்கங்களில் காலராநோய் பரவி இருந்தபோது அதிகாரிகளுடன் இவர்களும் ஒத்துழைத்தனர். இனாகுலேஷன் செய்துகொள்ளும்படி பிரசாரமும், தெருக்களையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள உதவியும் புரிந்தனர்.

---

## ஸ்ரீராமா ஆரம்பபாடசாலை, பெரியதெரு, கும்பகோணம்

30—1—43ல் முதல் வருஷாந்திர ஓட்டப் பந்தயப் போட்டி நடைபெற்றது. டாக்டர் சாக்கோ தலைமை வகித்தார். பலபிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். வெற்றி பெற்றவர்களுக்கு ஸ்ரீமதி சாக்கோ பரிசுகள் வழங்கினார். தலைமை உபாத்தியாயர் ஸ்ரீராமமிர்தாச்சாரியார் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது. சிறுவர் சிறுமிகளுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

---

## ஸ்ரீபாலசரஸ்வதிபாடசாலை, கருந்தட்டாங்குடி, தஞ்சாவூர்

### ஸங்கீத வகுப்பு ஆரம்பம்

1—2—43ல் திருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல் தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்றிருக்கும் ஸ்ரீ V. குருஸ்வாமி சாஸ்திரிகள் தலைமை வகித்து, ஸங்கீதவகுப்பைத் திறந்துவைத்து பெண்கள் ஸங்கீதம் கற்றுக்கொள்வதின் அவசியத்தைப்பற்றி விளக்கினார். ஸங்கீத ஆசிரியர் ஸ்ரீ வெங்கடாசலம் பிள்ளை அவர்களால் சேர்ந்திருந்தபெண்களுக்குப்

பாடம் கற்பிக்கப்பட்டது. மானேஜர் ஸ்ரீ சீதாராமய்யர் வந்தனோப சாரம் கூறினார்.

---

## ஆரம்ப ஆசிரியர்சங்கம், ஓட்டப்பிடாரம் (திருநெல்வேலி)

9—1—43ல் ஸ்ரீ **M. A.** பீட்டர் அவர்கள் தலைமையில் ஒரு விசேஷக்கூட்டம் நடைபெற்றது.

---

## திருச்செந்தூர் தாலூகா எஸ்டேட் ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன் குலசேகர பட்டணம்

30—1—43-ல் இவ்வருஷத்திய மூன்றாவது கூட்டம் ஸ்ரீ **T.** வில்வ ராயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

## ஹிந்து எலிமெண்டரி பாடசாலை, கொரக்குளம்

31—1—43-ல் இப்பாடசாலை பெற்றோர் மகிழ் விழா ஆலங்குளம் சப்-ரிஜிஸ்தரார் ஸ்ரீ பொன்னுசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பல பெற்றோர்களும், பிரமுகர்களும், ஆசிரியர்களும் மாணவர்களும் கூடியிருந்தனர். நல்லூர் பெண் பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ ஜான் சாமுவேல் 'இந்தியாவும் நாமும்' என்பது பற்றியும், ஆலங்குளம் டாக்டர் ஸ்ரீ சாமுவேல் துரைராஜ் 'தொத்து நோய்களும் அவற்றைத் தடுக்கும் விதமும்' என்பது பற்றியும், நல்லூர் ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ எட்வின் சாமுவேல் 'யுத்தமும் பெற்றோரும்' என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். மாணவ மாணவிகளால் 'பெற்றோர் சங்கம்' என்பது பற்றி உரையாடலும் 'கல்வி' என்பது பற்றி சொற்பொழிவும், 'இராஜநீதி' என்ற நாடக நடிப்பும் நடைபெற்றன. வந்திருந்த யாவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

---

## முசிரி தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன்

30—1—43-ல் இந்த யூனியனின் இரண்டாவது மகா சபை கூட்டம் நடைபெற்றது. அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாலையில் நடந்த ஆண்டு விழாவிற்கு திருச்சி ஜில்லா போர்டு உபதலைவர் தலைமை வகித்தார். திருச்சி ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீராமன் மேனன் அவர்கள் ஆசிரியர்களின் மகத்தான கடமை என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். முசிரி ரேஞ்சு கல்வி அதிகாரி ஸ்ரீ வீராசாமி அவர்கள் ஆசிரியர்களின் தியாகம் என்பதுபற்றிப் பேசினார். பின்பு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## ஸ்ரீ சாரதா பாடசாலை, மாம்பலம்

17—2—43 ல் பெற்றோர் சங்கம் ஸ்ரீ N. சாரங்கபாணி அய்யங்கார் அவர்கள் தலைமையில் கூடிற்று. ஏராளமான பெற்றோர்கள் வந்திருந்தனர். பொருட்காட்சி ஒன்றையும், ஒரு மாணவனால் எழுதப் பட்ட பாரதமாதா படத்தையும் தலைவர் திறந்துவைத்தார். சிறுவர் சிறுமிகளால் ஓர் கதம்பக்கச்சேரி நடைபெற்றது. பெற்றோர்களும், தலைவரும் இப்பாடசாலை வேலைகளைப்பற்றி புகழ்ந்து பேசினார்கள்.

பெற்றோர்கள் பொருட்காட்சியை பார்வையிட்டபொழுது மாணவர்களால் தயாரித்து வைக்கப்பட்ட பிரம்பு சாமான்கள் முதலியன சுமார் 50 பேருக்கு விற்கப்பட்டன. இப்பொருட் காட்சிகளைப்பற்றி ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ராமசந்திர ராவும், ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ ராகவாச்சாரியாரும் பெருமையாக குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(b) 20—1—43 ல் பாஷா அபிவிருத்தினி சங்கத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும், **Citizenship classes** நடைபெற்றன.

(c) 30—1—43 ல் சைதாப்பேட்டையில் நடந்த இன்டர் ஸ்கூல் ஸ்போர்ட்ஸில் இப்பள்ளிக்கூடம் கலந்துகொண்டு பல பரிசுகள் பெற்றது.

7—2—43 ல் சைதாப்பேட்டை இரண்டாவது சென்டர் ஆசிரிய சங்க ஆண்டுவிழாவில் கதம்பக்கச்சேரியில் இப்பள்ளிக்கூடம் பங்கெடுத்துக்கொண்டது.

---

## சைதாப்பேட்டை இரண்டாவது சென்டர் ஆசிரியர் சங்கம்

7—2—43 ல் இச்சங்கத்தின் வருஷாந்திரவிழா ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ P. ராகவாச்சாரியார் அவர்கள் தலைமையில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சிறுவர் சிறுமிகள் கதம்பக்கச்சேரி நடத்தினர். வித்வான் ஸ்ரீ ஆறுமுக முதலியார் 'கம்பன் கண்ட தம்பியார்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார். தலைவர் முடிவுரைக்குப்பின் புகைப் படம் பிடிக்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

---

## ஆரம்ப ஆசிரியர் சங்கம், பள்ளிபாளையம்

20—1—43 ல் ஆசிரியர் ஸ்ரீ S. நாராயண அய்யர் அவர்கள் தலைமையில் இச்சங்கம் கூடிற்று. அப்பொழுது, ஸ்ரீ A. P. வெங்கட சுப்பய்யர், T. N. அப்புசாமி அய்யர், N. A. சுந்தரேசன் முதலியோர் "ஓய்வுநேர வேலைகள்" என்பது பற்றியும், ஸ்ரீ R. வெங்கட்ராமய்யர்,

S. K. அகிலாண்டய்யர் முதலியோர், "இந்தியா—இராஜீயப்பிரிவுகள்" என்பதுபற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். தலைவர் பின்னுரைக்குப் பின் கூட்டம் இனிது கலைந்தது.

---

## தென்னாற்காடு ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் மகாநாடு

7—2—43 ல் இம்மகாநாடு நடைபெற்றது. R. C. ஆரம்பபாடசாலைகளின் மானேஜர் **Rv. Father P. Marie** கொழுந்தைசாமி அவர்கள் தலைமை வகித்தார். விழுப்புரம் நகராட்சி உயர்தர பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

தற்போது திரவியசகாய ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதம் ரூ. 2 வீதம் பஞ்சப்படி கொடுக்க ஏற்பாடு செய்ததற்காக டைரக்டார் ஸ்டாதம் துரையவர்களுக்கும், டெபுடி டைரெக்டர் லோபோ துரையவர்களுக்கும் நன்றியையும் வந்தனத்தையும் தெரிவித்தும், கிராண்டுகளில் வெட்டு ஏற்பட்டிருப்பதை நிறுத்தி பழய வெட்டுத் தொகைகளை திருப்பிக் கொடுக்கும்படியும், இதர பாடசாலை கிராண்டுகளைப்போல் எய்டெட் பாடசாலை கிராண்டுகளை உயர்த்தி யளிக்கும்படியும், ஜில்லா ஐக்கிய ஆசிரிய மானேஜர் சங்கம் நிறுவ ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

---

# பத்திராதிபர் குறிப்புகள்

## நமது உபாத்யாய சங்க கார்ய ப்ரவீணர்

மாசி 2ம்வ தென்இந்திய ஆசிரியர்களுக்கு ஒரு பெரும் திருநாளாகும். அன்று, நமது தென்னிந்திய ஆசிரிய சங்கத்தின் மாஜி தலைவராகிய ஸ்ரீமான் எக்ஞ நாராயண அய்யரின் சஷ்டி அப்தபூர்த்தி மிகச் சிறப்புடன் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமான் அய்யர் அவர்கள் தென்னிந்திய ஆசிரியச் சங்கத்தில் சென்ற 25 வருஷங்களாக ஈடுபட்டு, ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்காக பல அரிய தொண்டுகள் செய்துள்ளது நேயர்களுக்கு தெரிந்ததே. 1924 ம் வருஷம் முதல் 1940 வரையில் 16 வருஷங்களுக்கு இவரே பிரதிவருஷமும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவ்வருஷங்களில் தென்னிந்திய ஆசிரியர் சங்கம் பல துறைகளிலும் சிறப்புடன் உழைத்துவந்ததற்கு முக்கிய காரணங்களில் இவர் தலைமை வகித்து, சங்கக்கார்யங்களை செவ்வனே நடத்திவந்தது ஒன்றாகும். இவ்விராஜதானியிலுள்ள பல இடங்களிற்கு சுற்றுபிரயாணம் செய்து ஆங்காங்குள்ள ஆசிரியர்களுடன் கூடிப்பேசி, ஆசிரியர் சங்கங்களை ஸ்தாபித்தும், அவைகளை மாகாணச் சங்கங்களுடன் இணைத்தும், ஆசிரிய சங்க காரியங்களைப் பெருக்கியும் அவைகளைப் பலப்படுத்தியும் வந்தது எல்லோருக்கும் தெரிந்ததே. இவர் பச்சையப்பன் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்துவந்தார். ஆயினும் ஆரம்ப ஆசிரியர்களிடம் சகோதரபாவத்துடன் கலந்து அவர்களுடைய கஷ்டங்களை அறிந்து, அதைத் தீர்ப்பதையே ஒரு லக்ஷ்யமாக மேற்கொண்டது மிகவும் போற்றத்தக்கது. இவருடைய ஊக்கத்தின் காரணமாகவே பல ஆரம்ப ஆசிரியர் சங்கங்கள் இப்பொழுது தென்இந்திய சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. தென்னிந்திய ஆசிரியர் சங்கக்காப்பு நிதி ஸ்தாபனம்செய்ய இவர் மிக்க பாடுபட்டார். ஸ்தாபனம் செய்தபின்னும் அதை ஒழுங்கானமுறையில் அமைத்து ஆசிரியர்களுக்கு சாச்வதபயன் அளிக்கும்படி அதை சீர்திருத்தியும் செய்துள்ளார். **The South Indian Teacher** என்னும் மாதாந்திரப் பத்திரிகையை ஸ்தாபித்ததும் இவர் தலைமையில்தான். ஆரம்பமுதல் சங்கத்தின் தலைவராகயிருந்த வரையில் இவரே அதின் பத்திரிகாசிரியராக இருந்துவந்தார். ஆரம்ப ஆசிரியர்களுக்கென்ற ஒரு பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டுமென்ற அவா மிகவும் அதிகமிருந்தது. 1936 ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் பாலர் கல்வியை ஸ்தாபனம் செய்ததும் இவரே. நமது சங்கத்தின் அபிவிருத்திக்கு இவர் செய்துள்ள தொண்டை பாராட்டி இரண்டு வருஷங்

களுக்குமுன்பு, மாகாண கல்வி மகாநாட்டில் 'உபாத்யாய சங்க கார்ய ப்ரவீணு' என்ற பட்டம் இவருக்கு அளிக்கப்பட்டது. இவ்வருஷ ஆரம்பத்தில், துரைத்தனத்தாரும் கல்வி அபிவிருத்திக்காக இவர் புரிந்த அரிய செயல்களைப் பாராட்டி ராவ் பகதூர் என்னும் பட்டத்தை வழங்கியுள்ளதும் போற்றத்தக்கது. ஆசிரியர்பால் இவர் செய்துள்ளது போலவே, கூட்டுறவுச்சங்கம், சாரணீய இயக்கம், சமூகச் சேவை முதலியவைகளிலும் இவர் ஈடுபட்டுள்ளார். சென்னையிலுள்ள T. U. C. S. க்கு 4 வருஷங்கள் மானேஜிங் டைரக்டராக இருந்துள்ளார்.

இப்பேராசிரியருடைய சஷ்டி அப்த பூர்த்தியைக்கொண்டாட தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம், சனிக்கிழமையன்று திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில், நடைபெற்றது. கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரிகள் அக்கிராசனம் வகித்தார். மாகாணத்தின் பல இடங்களிலிருந்து, பிரதிநிதிகள் வந்திருந்து, நமது கார்யப் பிரவீணுவைப்போற்றி உபசரித்தார்கள்.

யுத்தப்படி

உதவிபெறும் ஆரம்பப் பாடசாலைகளில் வேலைபார்த்துவரும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு அக்டோபர் முதல்தேதி முதல் போர் முடியும் வரை மாதம் ரூ 2 வீதம் யுத்தப்படி (**Dearness allowance**) கொடுக்கப்படும் என்றும் அதற்கென்று 14 லக்ஷரூபாய் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றதென்றும் ஓர் அறிக்கை இம்மாதத்தில்வெளிவந்தது நமது நண்பர்களுக்கு களிப்பளிக்கக்கூடியது. ஆரம்ப ஆசிரியர்கள், தங்கள் மிகக் குறைவான ஊதியத்தைக்கொண்டு, போரின்விளைவாக ஏற்பட்டுள்ள பஞ்சகாலத்தில் மிகவும் துன்புறுகிறார்கள் என்பது சொல்லாமலே எல்லோருக்கும் விளங்கும். ஆசிரியர் சங்கங்கள் இவைகளை துரைத்தனத்தாருக்கு எடுத்துச்சொல்லி, யுத்தப்படி கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். ஆசிரியர்களின் கஷ்டங்கள் பலவையும் நன்குணர்ந்த நமது டைரக்டராகிய ஸர் R. மெவரில் ஸ்டாதாம் துரை அவர்கள், இவர்களுக்கு உபகாரம் அளிப்பதின் அவசியத்தை வற்புறுத்தி இந்த உதவியை அளித்தது மிகவும் பாராட்டத்தக்கது. ஆரம்ப ஆசிரியர்களின் சார்பாக, அவருக்கும், கவர்னரின் கல்வி ஆலோசகராகிய T. ஆஸ்டின் துரையவர்களுக்கும் நமது நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

## S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

BAZAAR ROAD, VILLUPURAM.

### செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள் :

சேரும்போது

பிரவேசக் கட்டணம் .... ரூ. 1.

வருஷக் கட்டணம் .... ரூ. 2.

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்

பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2

பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள் :

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... ... | ரூ. 2,25,000 |
| பாலிஸிக்கள் | ... ... | 1,350 |
| யூனிட்டுகள் | ... ... | 2,500 |

### அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினல், கிடைக்கக்கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.


*Regd. No M. 3473*



# புதிய எண்ணங்களுக்கு

மாணவர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் டீயை மிக விரும்புவதேன்? டீ மூளைக்கு ஊக்கமளித்து புதிய புதிய எண்ணங்களை வெளியிட உதவுவதால் தான். மற்றெந்த பானத்திற்குமில்லாத ஓர் விசேஷ குணம் டீக்கு உண்டு. அது மூளையை சுருசுருப்பாக்கி கற்பனா சக்தியை விருத்தி செய்யும் குணமே. புதிய எண்ணங்களைப் பெற டீ அருந்துங்கள்.

ஊக்கமளிக்க



டீ தயாரிக்கும் முறை: சுத்தமான தண்ணீரைக் கொதிக்க வைத்து சாயமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீ ஸ்பூன் வீதமும், அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப் போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு, ஐந்து நிமிஷம் கழித்து வடிக்கட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

# இந்தியன் டீ

## சர்வ சாதாரணமான பானம்

இந்தியன் டீ மார்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

I.K.147.V.

Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S. Sabhesan, M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.